# அரச நிதி*

1987 இன் தற்காலிகத் தரவுகளின்படி வரவு செலவுத் திட்டக்குறை (நன்கொடைகளுக்கு முன்) 1986 இன் ரூ. 219,560 இலட்சம் கொண்ட குறைக்கெதிராக ரூ. 209,040 இலட்சமாக விளங்கியது. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான வரவு செலவுத் திட்டக் குறை 1986 இன் 12.2 சதவீதத்திலிருந்து 1987 இல் 10.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து நிதி நிலையில் மிதமான முன்னேற்றத்தைப் பிரதிபலித்தது.

1987 இல் வரவு செலவுத் திட்டக் குறை குறைந்தமை பல காரணிகளின் விளைவாகும். முதலாவது, வருமான வரிகள், பொது விற்பனைகள், மொத்த விற்பனை வரிகள் ஆகியவற்றிலிருந்தான அரசின் அரசிறையில் மெதுவான வளர்ச்சி காணப்பட்டபோதிலும் அரசிறையின் மொத்த வளர்ச்சி பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகளிலிருந்தும் வரியல்லா இறை மூலங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய வரவுகளின் காரணத்தால் உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டது. இரண்டாவது, அண்மைய ஆண்டுகளில் வரவு செலவுத்திட்ட சமமின்மைக்கான முதன்மை மூலமாக விளங்கும் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் கணிசமானளவு முன்னேற்றத்தைக் காட்டி மிகையொன்றினை உருவாக்கியது. மூன்றாவதாக, பாதுகாப்புக்காகத் தேவைப்பட்ட துணைச் செலவினம் ஏனைய அமைச்சுக்களில் அவற்றின் மூலதனச் செலவினத்திற்கான ரூபா ஒதுக்குகளில் 11 சதவீத வெட்டினை விதிப்பதன் மூலம் திருப்பப்பட்டது. 1987 இல், குறைவான வரவு செலவுத் திட்டக் குறையுடனான இறை வெளிப்பாடு ஒன்றினை உருவாக்குவதற்கு இவ் அபிவிருத்திகள் துணைபுரிந்தன.

---

* இப்பகுதியில் தரப்பட்டுள்ள தரவுகள் தற்காலிகமானவை. திருத்தியமைக்கப்பட்ட தரவுகள் 1987 இன் பொருளாதார மீளாய்வில் வெளியிடப்படும்.

பொருளாதார ஆய்வினை செறியாக்கும் பொருட்டுத் தரவுகள் பன்னாட்டு நாணய நிதியத்தின் கைநூலான அரச நிதிப்புள்ளிவிபரவியலில் தரப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கேற்ப காட்டப்பட்டுள்ளன. எனவே இப்பகுதியில் தரப்பட்டுள்ள வடிவமும் தரவும் முந்திய ஆண்டறிக்கைகளில் தரப்பட்டவற்றிலிருந்து வேறுபடும். ஆனால், அரசின் நடுத்தரக்கால கொள்கை அமைப்புடன் ஒப்பிடத்தக்கதாயிருக்கும். கைநூலின்படி அரசின் அரசிறை மீளச் செலுத்தப்படவேண்டியதல்லாத எல்லா வரவுகளையும் உள்ளடக்குவதுடன் இவ்வாண்டின் மீளளிப்புக்களைக் கழித்துக் காட்டப்பட்டுள்ள வேளையில் செலவு மீளச் செலுத்தப்பட வேண்டியதல்லாத அரசின் எல்லாக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றது. எனவே இறக்குமதித் தீர்வை மீளளிப்பு, வர்த்தக முயற்சிகளின் மொத்த வரவுகளும் கொடுப்பனவுகளும், இணைப்பு முதலீட்டு நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட வட்டி என்பன அரசிறை, செலவு ஆகிய இரண்டிலுமிருந்து நீக்கப்பட்டுள்ளன. வர்த்தக முயற்சிகளின் இலாபங்கள் அரசிறையில் உள்ளடக்கப்பட்டுள்ள வேளையில் இழப்புக்கள் நடைமுறைச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு, நடைமுறைச் செலவு விடயமாகக் கணிக்கப்பட்டுள்ளது. மூலதனச் செலவு கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் நீங்கலாகக் காட்டப்பட்டுள்ளது. நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) அரசின் அரசிறைக்கும் நடைமுறைச் செலவிற்குமிடையிலுள்ள வேறுபாடாகக் காட்டப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டக் குறையைக் கணிப்பதில் அரச நிதிப் புள்ளிவிபரவியல் கையேடு நன்கொடைகளை அரசிறையுடன் வகைப்படுத்தியுள்ளது. இம் மாற்றல்கள் குறையை நிதியிடுவதனைவிட அதனைக் குறைப்பதனையே கருதும் வகையில் இது அமைகின்றது. வரவு செலவுத் திட்டத் தரவுகளைப் பயன்படுத்துதல் தொடர்பாக தேசிய கணக்குகளிலும் சென்மதி நிலுவையிலும் பின்பற்றப்பட்ட அணுகுமுறையுடன் இச் செய்முறையானது ஒத்துப்போவதாயுள்ளது. எனினும் வேறுபட்ட ஆய்வு நோக்குகள் காரணமாக நன்கொடைகளுக்கு முன்னரும் நன்கொடைகளுக்குப் பின்னருமான வரவு செலவுத் திட்டக் குறை இவ்வறிக்கையில் வெவ்வேறாகக் காட்டப்பட்டுள்ளது. அரச நோக்கத்திற்கான கடன் வழங்கல்களிலிருந்து அரசிற்குப் பின்னர் செலுத்தப்பட்ட மீளக் கொடுப்பனவுகளைக் கழித்து மீளக் கொடுப்பனவுகள் நீங்கலான கடன் வழங்கல் என வரையறுக்கப்பட்டுள்ளது. இது அரசின் மொத்தச் செலவில ஒரு பகுதியாகும்.

1987 இல் மொத்த வரவு செலவுத்திட்ட நிலை குறைந்தளவிலான குறையினைக் காட்டிய வேளையில் இந்நிதியளவுகளின் போக்கு, இறை முறை தற்போது எவ்வித கட்டுப்பாடுகளுக்கும் வரையறைகட்கும் கீழ்ச் செயற்படுகின்றது என்பதனைத் தொடர்ந்தும் பிரதிபலித்தது. உதாரணமாக, நடைமுறை மிகை பெயரளவு நியதியில் சிறிதளவால் உயர்வடைந்தாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக நோக்குகையில் 1986 இன் 1.8 சதவீதத்திலிருந்து 1987 இல் 1.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதேவேளை வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்துமான மூலவளங்கள் நீங்கலான வரவு செலவுத் திட்டக்குறை ரூ. 35,410 இலட்சம் கொண்ட இடையொன்றினை விளைவித்ததோடு இது வங்கித்தொழில் மூலங்களினால் நிதியிடப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக 1987 இல் வங்கித்தொழில் முறையிலிருந்து பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் 1.8 சதவீதமாக விளங்கியது. வங்கிக் கடன்பாடுகளின் மீது தொடர்ந்தும் தங்கியிருத்தலும், நடைமுறைக் கணக்கு மிகையினைக் குறைப்பதும், மூலவளங்களின் கிடைத்தலுக்கு இசைவாக அரச செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதற்கு மேலும் முயற்சி மேற்கொள்ள வேண்டிய தேவையினை எடுத்துக் கூறுகின்றது.

### இறை வெளிப்பாடு

1987 இல் அரசின் அரசிறை ரூ. 421,550 இலட்சமாக விளங்கி 13 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்த வேளையில் ரூ. 387,130 இலட்சத்திற்கு வகைகூறும் நடைமுறைச் செலவு முன்னைய ஆண்டினை விட 14 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன்படி, வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு ரூ. 34,420 இலட்சம் கொண்ட மிகையினைக் கொண்டிருந்தது. ஒப்பிடுகையில் 1986 இல் நடைமுறைக் கணக்கு மிகை ரூ. 32,720 இலட்சமாக விளங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, அரசிறையை நோக்குகையில் அது 1986 இன் 20.8 சதவீதத்திலிருந்து 1987 இல் 21.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளை நடைமுறைச் செலவு 18.9 சதவீதத்திலிருந்து 19.7 சதவீதமாக உயர்வடைந்தது. எனினும், நடைமுறைக் கணக்குமிகை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1986 இன் 1.8 சதவீதத்திலிருந்து 1987 இல் 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரசிறையில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் காணப்பட்டபோதிலும் இவ்வாண்டில் அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் பாதுகாப்புச்செலவினத்தின் அதிகரிப்பும் காரணமாக 1987 இல் அரச சேமிப்புக்கள் குறைவடைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக வட்டிக் கொடுப்பனவுகள் 1986 இல் 4.9 சதவீதத்திலிருந்து 1987 இல் 5.2 சதவீதத்திற்கு உயர்ந்த வேளையில் பாதுகாப்புத் தொடர்பான செலவினம்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 3.5 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதமாக அதிகரித்தது.

1987 இல் மொத்த அரசிறையும் கொடைகளும் ரூ. 466,790 இலட்சமாக விளங்கி 14 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. மூலதனச் செலவிலும், மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலிலும் 4 சதவீதக் குறைப்பு ஏற்படுத்தப்பட்டபோதிலும் மொத்தச் செலவினம் ரூ. 630,590 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 7 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இதன் பயனாக இந்த ஆண்டு ரூ. 163,800 இலட்சம் வரவு செலவுத் திட்டக் குறையினைக் கொண்டு விளங்கி (கொடைகளின் பின்னர்) முன்னைய ஆண்டின் குறையினைவிடக் குறைவானதாக விளங்கியது. வரவுசெலவுத் திட்டக் குறையானது மொத்த

## அட்டவணை 1.41

### அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப் பீடுகள் | 1987 தற்காலிகம் | 1988 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப் பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... | 17,496 | 19,586 | 26,790 | 37,354 | 39,556 | 40,991 | 45,626 | 46,679 | 51,225 |
| மொத்த அரசிறை ... | 14,775 | 16,210 | 23,317 | 34,061 | 36,249 | 37,238 | 41,531 | 42,155 | 46,225 |
| வரி அரசிறை ... | 13,696 | 14,737 | 19,912 | 29,939 | 30,442 | 31,272 | 35,704 | 35,127 | 39,785 |
| வரியல்லா அரசிறை ... | 1,079 | 1,473 | 3,405 | 4,122 | 5,807 | 5,966 | 5,827 | 7,028 | 6,440 |
| கொடைகள் ... | 2,721 | 3,376 | 3,473 | 3,293 | 3,307 | 3,753 | 4,095 | 4,524 | 5,000 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... | 28,014 | 33,512 | 39,637 | 47,837 | 55,234 | 59,193 | 62,323 | 63,059 | 72,534 |
| நடைமுறை ... | 14,649 | 18,341 | 22,002 | 24,630 | 32,645 | 33,966 | 36,953 | 38,713 | 40,548 |
| மூலதனம் ... | 11,252 | 15,427 | 15,863 | 19,915 | 21,530 | 23,236 | 23,351 | 22,969 | 27,017 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன்வழங்கல் ... | 2,113 | — 256 | 1,772 | 3,292 | 1,059 | 1,991 | 2,019 | 1,377 | 4,969 |
| நடைமுறைக்கணக்குமிகை/ குறை (—) | 126 | — 2,131 | 1,315 | 9,431 | 3,604 | 3,272 | 4,578 | 3,442 | 5,677 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குமுன்) ... | —13,239 | —17,302 | —16,320 | —13,776 | —18,985 | —21,956 | —20,792 | —20,904 | —26,309 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குப்பின்) ... | —10,518 | —13,926 | —12,847 | —10,483 | —15,678 | —18,203 | —16,697 | —16,380 | —21,309 |
| நிதியிடல் ... | 10,517 | 13,927 | 12,845 | 10,483 | 15,678 | 18,204 | 16,697 | 16,380 | 21,309 |
| வெளிநாட்டுக்கடன்பாடு ... | 4,880 | 4,744 | 6,312 | 6,492 | 7,109 | 9,061 | 6,649 | 5,716 | 12,520 |
| உள்நாட்டுக்கடன்பாடு ... | 5,637 | 9,183 | 6,533 | 3,991 | 8,569 | 9,143 | 10,048 | 10,664 | 8,789 |
| சந்தையல்லாக்கடன்பாடு ... | 344 | 1,487 | 1,977 | 951 | — 1,801 | — 669 | — | 724 | — |
| சந்தைக்கடன்பாடு ... | 5,293 | 7,696 | 4,556 | 3,040 | 10,370 | 9,812 | 10.048 | 9,940 | 8,789 |
| வங்கியல்லா ... | 1,446 | 4,020 | 4,082 | 5,135 | 5,659 | 6,765 | 6,578 | 6,399 | 6,213 |
| வங்கி ... | 3,847 | 3,676 | 474 | — 2,095 | 4,711 | 3,047 | 3,470 | 3,541 | 2,576 |

(தொடரும்)

அட்டவணை 1.41 (தொடர்ச்சி)

## அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு (மொ. உ. உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1987 தற்காலிகம் | 1988 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் | 20.6 | 19.8 | 22.0 | 24.3 | 24.4 | 22.8 | 22.3 | 23.7 | 22.6 |
| மொத்த அரசிறை | 17.4 | 16.3 | 19.2 | 22.2 | 22.3 | 20.8 | 20.3 | 21.4 | 20.4 |
| வரி அரசிறை | 16.1 | 14.9 | 16.4 | 19.5 | 18.7 | 17.4 | 17.4 | 17.9 | 17.6 |
| வரியல்லா அரசிறை | 1.3 | 1.5 | 2.8 | 2.7 | 3.6 | 3.3 | 2.8 | 3.6 | 2.8 |
| கொடைகள் | 3.2 | 3.4 | 2.9 | 2.1 | 2.0 | 2.1 | 2.0 | 2.3 | 2.2 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | 33.0 | 33.8 | 32.6 | 31.1 | 34.0 | 33.0 | 30.4 | 32.1 | 32.0 |
| நடைமுறை | 17.2 | 18.5 | 18.1 | 16.0 | 20.1 | 18.9 | 18.0 | 19.7 | 17.9 |
| மூலதனம் | 13.2 | 15.6 | 13.0 | 13.0 | 13.3 | 13.0 | 11.4 | 11.7 | 11.9 |
| மீள் கொடுப்பனவைக்கழித்த கடன் வழங்கல் | 2.5 | — 0.3 | 1.5 | 2.1 | 0.7 | 1.1 | 1.0 | 0.7 | 2.2 |
| நடைமுறைக்கணக்கு/மிகைக்குறை (—) | 0.1 | — 2.1 | 1.1 | 6.1 | 2.2 | 1.8 | 2.2 | 1.7 | 2.5 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) | —15.6 | —17.4 | —13.4 | — 9.0 | —11.7 | —12.2 | —10.1 | —10.6 | —11.6 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குப்பின்) | —12.4 | —14.0 | —10.6 | — 6.8 | — 9.7 | —10.1 | — 8.1 | — 8.3 | — 9.4 |
| நிதியிடல் | 12.4 | 14.0 | 10.6 | 6.8 | 9.7 | 10.1 | 8.1 | 8.3 | 9.4 |
| வெளிநாட்டுக்கடன்பாடு | 5.7 | 4.8 | 5.2 | 4.2 | 4.4 | 5.1 | 3.2 | 2.9 | 5.5 |
| உள்நாட்டுக்கடன்பாடு | 6.6 | 9.3 | 5.4 | 2.6 | 5.3 | 5.1 | 4.9 | 5.4 | 3.9 |
| சந்தையல்லாக்கடன்பாடு | 0.4 | 1.5 | 1.6 | 0.6 | — 1.1 | — 0.4 | — | 0.4 | — |
| சந்தைக்கடன்பாடு | 6.2 | 7.8 | 3.7 | 2.0 | 6.4 | 5.5 | 4.9 | 5.1 | 3.9 |
| வங்கியல்லா | 1.7 | 4.1 | 3.4 | 3.3 | 3.5 | 3.8 | 3.2 | 3.3 | 2.7 |
| வங்கி | 4.5 | 3.7 | 0.4 | — 1.4 | 2.9 | 1.7 | 1.7 | 1.8 | 1.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, 1986 இன் 10.1 சதவீதத்திலிருந்து 1987 இல் 8.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. வரவு செலவுத்திட்ட நோக்கங் களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் 1987 இல் ரூ. 45,240 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 21 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. இதற்கேற்ப வெளிநாட்டு நன்கொடையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1986 இன் 2.1 சதவீதத்திலிருந்து 1987 இல் 2.3 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவ்வாண்டில் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு நன்கொடைகள் அதிகரித்தபோதும் வரவு செலவுத்திட்டக் குறையானது (கொடைகளின் முன்னர்) 1987 இல் ரூ. 209,040 இலட்சமாக விளங்கி 5 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. இதனால் குறை (கொடைகளின் முன்னர்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமான 1986 இன் 12.2 சதவீதத்திலிருந்து 1987 இல் 10.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

குறையினை நிதியிடுவதற்கு (கொடைகளின் பின்) ரூ. 57,160 இலட்சம் கொண்ட தொகை, வெளிநாட்டுக் கடன்கள் மூலம் பெறப்பட்டது. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் தொகையைவிட 37 சதவீதமான வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது. 1987 இல் குறையினை நிதியிடு வதற்கு, வெளிநாட்டுக் கடன்களினை ஒரு மூலமாகக் கொண்டிருக்கும் முக்கியத்து வத்தினைக் குறைத்துள்ளது. உண்மையில் அண்மைய ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டத் தொகையில் கிட்டத்தட்ட அரைப் பங்கினை நிதியிட்ட வெளிநாட்டுக் கடன் கள் 1987இன் குறையில் மூன்றில் ஒரு பகுதிக்கு மட்டும் வகை கூறின. வெளிநாட் க்டு கடன்கள், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அண்மைய ஆண்டு களின் 4—5 சதவீத அளவுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 3 சதவீதத்திற்கு வகை கூறின. வெளிநாட்டு மூலவளங்களின் குறைக்கப்பட்ட பயன்பாடு பெரிதும் இறைத் தொழிற்பாட்டின் குறையினை சமாளிக்கக்கூடிய மட்டத்திற்குக் கட்டுப் படுத்திய அரசின் பெரு முயற்சியே காட்டுகின்றது.

குறையினை நிதியிடுவதற்கு 1987 இல் உள்நாட்டு மூலங்களிலிருந்து பயன் படுத்தப்பட்ட மூலவளங்கள் ரூ. 106,640 இலட்சம் தொகையினைக் கொண்டு விளங்கி முன்னைய ஆண்டினைவிட 17 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டியது. எனினும், வங்கியில்லாச் சந்தை மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலவளங்கள் ரூ. 63,990 இலட்சமாக 5 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. சந்தை அல்லா மூலங்கள் ரூ. 7,240 இலட்சங்களினை வழங்கியபோது வங்கி மூலங்கள் ரூ. 35,410 இலட்சங்களை உதவின. முன்னர் குறிப்பிட்டவாறு, வங்கித்தொழில் முறைகளி லிருந்து பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் 1986 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1987 இல் 1.8 சதவீதமாக விளங்கியது.

1987 இன் இறைத் தொழிற்பாடுகள் பற்றிய தொகுப்பு கடந்த ஏழு ஆண்டுகளின் ஒப்பிடத்தக்க தரவுகளுடன் அட்டவணை 1.2 இல் தரப்பட்டுள்ளது.

**அரசிறை**

1987 இல் அரசின் அரசிறை ரூ. 421,550 இலட்சமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் அரசிறையான ரூ. 372,380 இலட்சத்தினைவிட 13 சத வீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பிரதிபலித்ததுடன், இவ்வாண்டில் நிலவிய பொருளாதாரச் செயலாற்றத்தின் பின்னடைவினைக் கருத்திற் கொள்கையில் ஊக்கந்தரும் ஒரு அபிவிருத்தியாகவும் இருந்தது. அரசிறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் வரி/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் ஆகிய இரண்டும், முன்னேற்றங்களைப் பதிவு செய்து அரச அரசிறையின் வளர்ச்சி வீதம் பொதுவான பொருளாதார வளர்ச்சி வீதத்தினைவிட மிகக் கூடிய வேகத்திலிருந்த சூழ்நிலையைப் பிரதிபலிக்கின்றன. 1987 இல் வரி அரசிறை பெரும்பாலும் முன்னைய ஆண்டினைப் போன்றே மொத்த அரசிறையில் 83 சதவீதத்தினை வழங்கின. உள்நாட்டுப் பொருட்கள், பணிகள் மீதான வரிகளிலிருந்து கிடைத்த மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் 1986 இன் 47 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1987 இன் வரி அரசிறையில் 44 சதவீதத்தினை வழங்கின. அதேவேளை பன்னாட்டு வர்த்தகம் சார்ந்த வரிகளிலிருந்தான பங்களிப்பு 1986 இன் 35 சதவீதத்திலிருந்து 1987 இல் 37 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த வரி அரசிறையில் ஏற்றுமதி வரிகளின் பங்கு சிறிதளவு முன்னேற்றத்தினைக் காட்டிய வேளையில் வரி அரசிறையில் வருமான வரிகளிலிருந்தான பங்களிப்பு 1986 இன் 15 சதவீதத்திலிருந்து 1987 இல் 14 சதவீதததிற்கு வீழ்ச்சியடைந்தது. 1987 இல் அரசின் வரியல்லா அரசிறையின் மிகப் பெரும் மூலங்களாக மத்திய வங்கி இலாபங்கள், தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் தொழிற்பாட்டு மிகை, வட்டி வருவாய், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீதான சிறப்புத் தீர்வை என்பன விளங்கின. இம் மூலங்களிலிருந்தான பெறுகைகள் 1987 இன் வரியல்லா அரசிறையில் ஏறத்தாழ 90 சதவீதத்திற்கு வகை கூறின.

1987 இல் பொருட்கள். பணிகள் மீதான உள்நாட்டு வரிகளிலிருந்தான மொத்த அரசிறை ரூ. 156,670 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 6 சதவீதம் உயர்வானதாக இருந்தது. 1987 இல் பொதுவாகப் பொருளாதாரம் நலிவுற்றிருந்தபோதும் பொருட்கள், பணிகள் மீதான உள்நாட்டு வரிகளிலிருந்தான அரசிறை முன்னேற்றத்தைக் காட்டியமைக்குக் கலால் வரிகளின் மேல் நோக்கிய திருத்தமும் தயாரிப்புக் கைத்தொழில்களின் உயர்ந்த மட்ட உற்பத்தியுமே முக்கிய காரணங்களாகும். உள்நாட்டுப் பொருட்கள் பணிகளிலிருந்தான வரி அரசிறையில் மூன்றிலிரண்டு பங்கினைக் கொண்டிருக்கும் மொத்த விற்பனை வரிகளிலிருந்தான வருவாய் முன்னைய ஆண்டின் 1 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சிக்கு மாறாக 5 சதவீதத்தினால் அதிகரித்தது. தயாரிப்பு நடவடிக்கைகள் மீதான மொத்த விற்பனை வரிகள் 12 சதவீதத்தினால் வளர்ச்சியுற்ற வேளையில் இறக்குமதிகள் மீதான இவ்வரிகள் 2 சதவீதத்தினால் உயர்வுற்றன. எனினும் தயாரிப்பல்லா நடவடிக்கைகள் மீதான மொத்த விற்பனை வரிகள் பெரும்பாலும் கடந்த ஆண்டின் மட்டத்திலேயே இருந்தன.

1987 இல் கலால் வரிகளிலிருந்தான பெறுகைகள் ரூ. 47,160 இலட்சமாக விளங்கி உள்நாட்டுப் பொருட்கள், பணிகள் மீதான வரிகளில் 30 சதவீதத்திற்கு வகை கூறின. குடிவகை மீதான கலால் வரிப் பெறுகை ரூ. 16,440 இலட்சமாக அமைந்து 11 சதவீத அதிகரிப்பினைக் காட்டிய வேளையில் புகையிலை மீதான கலால் வரி ரூ. 30,710 இலட்சமாக அமைந்து 5 சதவீதம் கொண்ட உயர்வைப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பிற்கு 1986 நவெம்பரில் தீர்வை வீதங்கள் மேல்

அட்டவணை 1.42

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1987 | 1988 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... ... | 13,696 | 14,737 | 19,912 | 29,939 | 30,442 | 31,272 | 35,704 | 35,127 | 39,785 |
| வருமானவரிகள் ... ... | 2,029 | 2,923 | 3,366 | 5,480 | 5,586 | 4,787 | 5,105 | 4,909 | 4,865 |
| தனியார் ... ... | 570 | 808 | 891 | 1,760 | 1,424 | 1,513 | 1,635 | 1,580 | 1,440 |
| கூட்டு ... ... | 1,459 | 2,115 | 2,475 | 3,720 | 4,162 | 3,274 | 3,470 | 3,329 | 3,425 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... ... | 282 | 322 | 397 | 489 | 499 | 648 | 1,563 | 1,568 | 1,553 |
| பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... ... | 4,866 | 6,320 | 8,710 | 10,888 | 13,359 | 14,787 | 16,156 | 15,667 | 18,707 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 2,829 | 4,052 | 6.224 | 8,143 | 10,189 | 10,088 | 10,920 | 10,611 | 12,450 |
| தயாரிப்பு ... ... | 1,728 | 1,806 | 2,718 | 3,045 | 3,768 | 3,270 | 4,010 | 3,675 | 3,740 |
| தயாரிப்பல்லாத ... ... | 1,101 | 1,524 | 1,891 | 1,928 | 2,590 | 2,415 | 2,760 | 2,426 | 2,910 |
| இறக்குமதிகள் ... ... | — | 722 | 1,615 | 3,170 | 3,831 | 4,403 | 4,150 | 4,510 | 5,800 |
| கலால் வரி ... ... | 1,942 | 2,123 | 2,298 | 2,551 | 2,982 | 4,414 | 4,996 | 4,716 | 5,922 |
| குடிவகை ... ... | 749 | 808 | 867 | 1,013 | 1,104 | 1,485 | 1,695 | 1,644 | 2,040 |
| புகையிலை ... ... | 1,123 | 1,315 | 1,431 | 1,537 | 1,877 | 2,927 | 3,300 | 3,071 | 3,880 |
| உரிமக்கட்டணங்கள் ... ... | 95 | 145 | 188 | 194 | 188 | 285 | 240 | 340 | 335 |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 6,519 | 5,172 | 7,439. | 13,082 | 10,998 | 11,050 | 12,880 | 12,983 | 14,660 |
| இறக்குமதிகள் ... ... | 2,725 | 2,538 | 4,047 | 6,670 | 8,093 | 9,414 | 11,140 | 11,059 | 12,445 |
| ஏற்றுமதிகள் ... ... | 3,771 | 2,634 | 3,392 | 6,412 | 2,905 | 1,636 | 1,740 | 1,924 | 2,215 |
| தேயிலை ... ... | 1,965 | 1,594 | 2,222 | 5,004 | 2,214 | 996 | 955 | 1,152 | 1,305 |
| இதில் பெறுமான விகிதவரி ... ... | 86 | 150 | 932 | 3,236 | 1,032 | 62 | 60 | 262 | 550 |
| இறப்பர் ... ... | 1,433 | 753 | 852 | 1,009 | 254 | 307 | 520 | 530 | 725 |
| தெங்கு ... ... | 241 | 191 | 241 | 297 | 342 | 232 | 140 | 148 | 110 |
| ஏனைய ஏற்றுமதிகள் ... ... | 132 | 96 | 77 | 102 | 95 | 101 | 125 | 94 | 75 |
| வரியல்லா அரசிறை ... ... | 1,079 | 1,473 | 3,405 | 4,122 | 5,807 | 5,966 | 5,827 | 7,028 | 6,440 |
| சொத்து வருவாய் ... ... | 584 | 777 | 2,606 | 3,085 | 3,926 | 4,731 | 4,025 | 4,541 | 4,556 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் ... ... | — | — | 1,500 | 1,650 | 1,500 | 1,779 | 1,750 | 1,723 | 1,650 |
| வட்டிவருவாய் .... ... | 168 | 243 | 492 | 1,783 | 3,274 | 2,860 | 2,018 | 2,364 | 2,070 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... ... | 262 | 327 | 356 | 692 | 666 | 803 | 1,098 | 1,229 | 1,638 |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் ... | 147 | 186 | 202 | 265 | 364 | 347 | 353 | 334 | 460 |
| ஏனைய வரியல்லா அரசிறை2 ... ... | 348 | 510 | 597 | 772 | 1.517 | 888 | 1,449 | 2,153 | 1,424 |
| மொத்த அரசிறை ... ... | 14,775 | 16,210 | 23,317 | 34,061 | 36,249 | 37,238 | 41,531 | 42,155 | 46,225 |

1 இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள்.
2 மூலதனப் பொருட்களின் விற்பனைகள் உட்பட

(தொடரும்)

அட்டவணை 1.42

**கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு (மொ. உ. உ. இன் சதவீதமாக)**

(தொடர்ச்சி)

| விடயம் | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1987 தற்காலிகம் | 1988 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... ... | 16.1 | 14.9 | 16.4 | 19.5 | 18.7 | 17.4 | 17.4 | 17.9 | 17.6 |
| வருமானவரிகள் ... ... | 2.4 | 2.9 | 2.8 | 3.6 | 3.4 | 2.7 | 2.5 | 2.5 | 2.1 |
| தனியார் ... ... | 0.7 | 0.8 | 0.7 | 1.1 | 0.9 | 0.8 | 0.8 | 0.8 | 0.6 |
| கூட்டு ... ... | 1.7 | 2.1 | 2.0 | 2.4 | 2.6 | 1.8 | 1.7 | 1.7 | 1.5 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... ... | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.4 | 0.8 | 0.8 | 0.7 |
| பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... | 5.7 | 6.4 | 7.2 | 7.1 | 8.2 | 8.2 | 7.9 | 8.0 | 8.3 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 3.3 | 4.1 | 5.1 | 5.3 | 6.3 | 5.6 | 5.3 | 5.4 | 5.5 |
| தயாரிப்பு ... ... | 2.0 | 1.8 | 2.2 | 2.0 | 2.3 | 1.8 | 2.0 | 1.9 | 1.7 |
| தயாரிப்பல்லாத ... ... | 1.3 | 1.5 | 1.6 | 1.3 | 1.6 | 1.3 | 1.3 | 1.2 | 1.3 |
| இறக்குமதிகள் ... ... | — | 0.7 | 1.3 | 2.1 | 2.4 | 2.5 | 2.0 | 2.3 | 2.6 |
| கலால் வரி ... ... | 2.3 | 2.1 | 1.9 | 1.7 | 1.8 | 2.5 | 2.4 | 2.4 | 2.6 |
| குடிவகை ... ... | 0.9 | 0.8 | 0.7 | 0.7 | 0.7 | 0.8 | 0.8 | 0.8 | 0.9 |
| புகையிலை ... ... | 1.3 | 1.3 | 1.2 | 1.0 | 1.2 | 1.6 | 1.6 | 1.6 | 1.7 |
| உரிமக்கட்டணங்கள் ... ... | 0.1 | 0.1 | 0.2 | 0.1 | 0.1 | 0.2 | 0.1 | 0.2 | 0.1 |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 7.7 | 5.2 | 6.1 | 8.5 | 6.8 | 6.2 | 6.3 | 6.6 | 6.5 |
| இறக்குமதிகள் ... ... | 3.2 | 2.6 | 3.3 | 4.3 | 5.0 | 5.2 | 5.4 | 5.6 | 5.5 |
| ஏற்றுமதிகள் ... ... | 4.4 | 2.7 | 2.8 | 4.2 | 1.8 | 0.9 | 0.8 | 1.0 | 1.0 |
| தேயிலை ... ... | 2.3 | 1.6 | 1.8 | 3.3 | 1.4 | 0.6 | 0.5 | 0.6 | 0.6 |
| இதில் பெறுமான விகித வரி ... ... | 0.1 | 0.2 | 0.8 | 2.1 | 0.6 | ... | ... | 0.1 | 0.2 |
| இறப்பர் ... ... | 1.7 | 0.8 | 0.7 | 0.7 | 0.2 | 0.2 | 0.3 | 0.3 | 0.3 |
| தெங்கு ... ... | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | ... |
| ஏனைய ஏற்றுமதிகள் ... ... | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | ... | ... |
| வரியல்லா அரசிறை ... ... | 1.3 | 1.5 | 2.8 | 2.7 | 3.6 | 3.3 | 2.8 | 3.6 | 2.8 |
| சொத்து வருவாய் ... ... | 0.7 | 0.8 | 2.1 | 2.0 | 2.4 | 2.6 | 2.0 | 2.3 | 2.0 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் ... ... | — | — | 1.2 | 1.1 | 0.9 | 1.0 | 0.9 | 0.9 | 0.7 |
| வட்டி வருவாய் ... ... | 0.2 | 0.2 | 0.4 | 1.2 | 2.0 | 1.6 | 1.0 | 1.2 | 0.9 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 0.3 | 0.3 | 0.3 | 0.5 | 0.4 | 0.4 | 0.5 | 0.6 | 0.7 |
| கட்டணங்களும் விதிப்புக்கட்டணங்களும் ... | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| ஏனைய வரியல்லா அரசிறை ... ... | 0.4 | 0.5 | 0.5 | 0.5 | 0.9 | 0.5 | 0.7 | 1.1 | 0.6 |
| மொத்த அரசிறை ... ... | 17.4 | 16.3 | 19.2 | 22.2 | 22.3 | 20.8 | 20.3 | 21.4 | 20.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நோக்கித் திருத்தப்பட்டமையே காரணமாகும். உந்து ஊர்திகளிலிருந்தான உரிமக் கட்டணங்களின் உயர்ந்த சேகரிப்புக் காரணமாக உரிமக் கட்டணங்களிலிருந்தான அரசிறை 19 சதவீத உயர்வினைக் காட்டியது.

1987 இல் பன்னாட்டு வர்த்தகம் சார்ந்த வரிகள் அரசிறையை ரூ. 129,830 இலட்சத்திற்கு உயர்த்தின. ரூ. 110,590 இலட்சம் கொண்ட இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை 17 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு ஒரு புறத்தில் சீனி, பெற்றோலியத்தின் உயர்ந்த இறக்குமதிகளும் மறுபக்கத்தில் ஒரு அலகிற்கான பெறுமதி அதிகரித்தமையும் பெருமளவிற்குக் காரணமாகும். இதனால் இறக்குமதித் தீர்வையின் சராசரி வீதம் 1986 இன் 16 சதவீதத்திலிருந்து 1987 இல் 18 சதவீதத்திற்கு அதிகரித்தது. பன்னாட்டு வர்த்தக வரிகளில் ஏறத்தாழ 15 சதவீதத்தினை உதவியுள்ள ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட வரிகளும் 1987 இல் 18 சதவீதத்தினால் அதிகரித்தன. தேயிலை ஏற்றுமதிகளின் மீதான குறிப்பிட்ட தீர்வையிலிருந்தான அரசிறை 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தெங்கின் மீதான ஏற்றுமதி வரிகளிலிருந்தான பெறுகைகள் 36 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்குக் குறைந்தளவு ஏற்றுமதிகளே முக்கிய காரணமாகும். எனினும், சாதகமான விலைகளின் காரணமாகத் தேயிலை பெறுமான விகித வரிகளிலும் இறப்பரிலுமிருந்தான சேகரிப்புக்கள் கணிசமான முன்னேற்றத்தினைக் காட்டின.

1987 இல் பொறி, பொறித்தொகுதி, கருவிகள், வர்த்தகக் கட்டிடங்கள் என்பவற்றிற்கான பெறுமானத் தேய்வு ஒதுக்குகளின் வீதத்தில் அதிகரிப்பும் வேளாண்மை உற்பத்திகளில் வீழ்ச்சியும் காணப்பட்டபோதும் கூட்டு, தனியாள் வருமான வரிகளிலிருந்தான பெறுகைகள் ரூ. 49,090 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 14 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு எதிராக 3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இதற்குத் தயாரிப்புத்துறையின் சிறந்த செயலாற்றமே காரணமாகும்.

1987 இல் வரியல்லா அரசிறை முன்னைய ஆண்டின் ரூ. 59,660 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 70,280 இலட்சமாக விளங்கியது. அரசின் சொத்து வருவாய் ரூ. 45,410 இலட்சமாக விளங்கி வரியல்லா அரசிறையில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கிற்கு வகை கூறியதுடன் 4 சதவீத வீழ்ச்சியையும் காட்டியது. தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் தொழிற்பாட்டு மிகையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டபோதும் இவ்வீழ்ச்சி ஏற்பட்டது. தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் தொழிற்பாட்டு மிகை ஏறத்தாழ 50 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டுத் தொலைத்தொடர்பு வசதிகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்

1987 இல் அரச அரசிறையின் புள்ளிவிபரத் தொகுப்பொன்று கடந்த ஏழு ஆண்டுகளுக்கான ஒப்பிடத்தக்க தரவுகளுடன் அட்டவணை 1.3 இல் தரப்பட்டுள்ளது.

நடைமுறைச் செலவு

1987 இல் மொத்த நடைமுறைச் செலவு ரூ. 387,130 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினதைவிட 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதன்படி நடைமுறைச் செலவு—மொத்த உள்நாட்டு உற்பத்தி


விகிதம் 1986 இன் 18.9 சதவீதத்திலிருந்து 1987 இல் 19.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. பொருட்கள், பணிகள் மீதான செலவு ரூ. 176,400 இலட்சமாக அமைந்து 1987 இன் நடைமுறைச் செலவில் ஏறத்தாழ அரைப் பங்கிற்கு வகை கூறியது. அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் பங்கினை ஒத்ததாக 1987 இன் நடைமுறைச் செலவில் 25 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள், குடியிருப்பாளர் என்பனவற்றிற்கான மொத்த நடைமுறை மாற்றல்கள் 1987 இன் மொத்த நடைமுறைச் செலவில் 28 சதவீதத்திற்கு வகை கூறின.

பொருட்கள், பணிகள் மீதான செலவு அரச ஊழியர்களின் சம்பளங்கள், கூலிகளின் பேரிலான ரூ. 79,860 இலட்சத்தினை உள்ளடக்கி 1987 இன் மொத்த நடைமுறைச் செலவில் ஏறத்தாழ 21 சதவீதத்திற்கு வகை கூறியது. 1986 இன் ஒப்பிடத்தக்க சதவீதப் பங்கு 24 சதவீதமாகும். ஏறத்தாழ மொத்தச் சம்பளங்கள் கூலிகளில் நான்கில் மூன்று பங்கு பொது நிருவாகத்தின் மீதானவையாகும். 1987 இல் சம்பளங்கள் கூலிகளின் மீதான செலவினத்தில் அதிகரிப்புக் காணப்படாத போதும் பயணச் செலவுகள், வாடகை, மின்வலு, தொலைத்தொடர்புக் கட்டணங்கள், பொருட்களின் கொள்வனவு, அலுவலக வழங்கல்கள், பாதுகாப்புப் பொருட்கள், பேணல் செலவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஏனைய பொருட்கள், பணிகள் மீதான மொத்தச் செலவினம் ரூ. 96,540 இலட்சமாக விளங்கி 35 சதவீத அதிகரிப்பொன்றினைக் காட்டியமைக்குப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே பெருமளவிற்குக் காரணமாகும்

1987 இல் நடைமுறை மாற்றல்கள் ரூ. 109,140 இலட்சமாக விளங்கிக் கடந்த ஆண்டின் 13 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1987 இல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூ. 31,850 இலட்சமாக விளங்கி மொத்த நடைமுறை மாற்றல்களில் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் 7 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தன. குறைந்த வருமானமுடைய குடியிருப்பாளர்களுக்கு நேரடி வருமான மாற்றல்களை வழங்குகின்ற உணவு, மண்ணெண்ணெய் உணவு முத்திரைத் திட்டங்களின் மீதான செலவு ரூ. 18,850 இலட்சமாக விளங்கி 5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. அதேவேளை பள்ளி செல்லும் சிறுர்களுக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட இலவச பாடநூல்கள், நண்பகல் உணவு, பருவகாலச் சீட்டு போன்ற மற்றைய ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்கள் 1987 இல் ரூ. 3,150 இலட்சம் செலவினை ஏற்படுத்தின.

1987 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்ட மொத்த நடைமுறை மாற்றல்கள் ரூ. 22,860 இலட்சமாக இருந்தன. இது கடந்த ஆண்டின் மட்டத்தினைவிட 3 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் 1987 இன் மொத்த நடைமுறை மாற்றல்களில் ஐந்திலொரு பங்கிற்கு வகை கூறினவெனினும் அவற்றுள் சில அவற்றின் தொழிற்பாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்கு இலாபமற்ற அரசு சார்ந்த முயற்சிகளாக விளங்கின. அதேவேளை அஞ்சல் பணிகள், புகைவண்டிப் பகுதி போன்ற வர்த்தக முயற்சிகள் தொடர்ந்தும் தொழிற்பாட்டு இழப்புக்களுக்குட்பட்டதன் காரணமாக வரவு செலவுத் திட்ட ஆதரவு அவசியமாயிற்று. 1987 இல் இவ்விரு திணைக்கள முயற்சிகளினதும் தொழிற்பாட்டு இழப்புக்கள் 1986 இன் இழப்பான ரூ. 4,140 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,580 இலட்சமாக விளங்கின.

## இறை அளவுகளின் போக்குகள்




இலங்கை மத்திய வங்கி

1987 இல் அரசின் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 101,590 இலட்சமாக இருந்தன. இது முன்னைய ஆண்டின் கொடுப்பனவுகளான ரூ. 87,620 இலட்சத்திலும் 16 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 75,950 இலட்சத்திற்கு 16 சத வீதத்தினால் உயர்வடைந்தவேளையில் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளும் ரூ. 25,640 இலட்சத்திற்கு 16 சதவீதத்தினால் வளர்ச்சி யடைந்தன. 1987 இல் அரச படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவு களில் நான்கில் மூன்று பங்கிற்கு வகை கூறும் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபாக் கடன்கள் மீதான ரூ. 44,990 இலட்சத்தையும் திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 30,920 இலட்சத்தையும் நிருவாகக் கடன்பாடுகளின் மீதான ரூ. 40 இலட்சத்தையும் உள்ளடக்கின. 1987 இல் ரூபாப் பிணைகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 8 சதவீதத்தினால் உயர் வடைந்த வேளையில் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 19 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வெளிநின்ற பொறுப்புக்களில் ஏற்பட்ட உயர்வை முதன்மைக் காரணமாகும். வெளிநாட்டுக் கடன்கள் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் வர்த்தகக் கடன்கள்மீது கொடுக்கப்பட வேண்டிய ரூ. 7,570 இலட்சத்தையும் உள்ளடக்கியுள்ளது. 1986 இல் அத்தகைய கொடுப் பனவுகள் ரூ. 8,010 இலட்சமாக இருந்தன.

1987 இற்கான அரச செலவின் தொகுப்பு கடந்த ஏழு ஆண்டுகளுக்கான ஒப்பிடத்தக்க தரவுகளுடன் அட்டவணை 1.43 இல் தரப்பட்டுள்ளது.

### மூலதனச் செலவு

1987 இல் மூலதனச் செலவு ரூ. 229,690 இலட்சமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் செலவிலிருந்தும் 1 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக மூலதனச் செலவு 1986 இன் 13 சதவீதத்திலிருந்து 1987 இல் 11.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இக்குறைப்பிற்கு, பாதுகாப்புச் செலவுகளில் ஏற்படும் இன்றி யமையாத அதிகரிப்புக்களுக்கு இடமளிக்கும் பொருட்டு இவ்வாண்டில் மூலதனச் செலவில் விதிக்கப்பட்ட வெட்டே பெருமளவு காரணமாகும்.

நிலையான சொத்துக்களின் கொள்வனவு, கட்டுமானம், பேணல் தொடர் பாக அரசிற்கு நேரடியாக ஏற்பட்ட செலவு மொத்த மூலதனச் செலவில் 47 சத வீதத்திற்கு வகை கூறிய வேளையில் கூட்டுத்தாபனங்களுக்கான மூலதன மாற்றல் கள் 49 சதவீதத்திற்கு வகை கூறின. முன்னைய ஆண்டில் கூட்டுத்தாபனங்களுக் கான மூலதன மாற்றல்கள் மொத்த மூலதனச் செலவில் 64 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

1987 இல் நிலையான சொத்துக்களில் கொள்வனவு, கட்டுமானம், பேணல் போன்றன மீதான மூலதனச் செலவு ரூ. 108,280 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் செலவினை விட 39 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 1987 இல் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கீழான மூலதனச் செலவு ரூ. 20,980 இலட்சமாக விளங்கி 55 சதவீதமான பெரும் அதிகரிப்பைக் காட்டியது. இதில், முதன்மை நீர்ப்பாசன புனரமைப்புச் செயற்றிட்டங்கள், புவியீர்ப்பு நீர்ப்பாசன வேலைகளின் கட்டுமானமும் முன்னேற்றமும், காணி தயார் செய்தல், கட்டிடங் களினதும் வீதிகளினதும் கட்டுமானம் போன்றனமீது ஏற்பட்ட செலவு 1986 இன்

அட்டவணை 1.43

## செலவு, மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல் என்பவற்றின் பொருளாதார பகுப்பாய்வு

ரூபாபத்து இலட்சம்

| விடயம் | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1987 தற்காலிகம் | 1988 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு ...** | **14,649** | **18,341** | **22,002** | **24,630** | **32,645** | **33,967** | **36,954** | **38,713** | **40,548** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 5,224 | 6,500 | 7,848 | 9,195 | 16,287 | 15,155 | 18,366 | 17,640 | 19,129 |
| சம்பளங்களும் கூலிகளும் ... | 3,579 | 4,561 | 4,811 | 5,554 | 6,878 | 8.028 | 8,278 | 7,986 | 10,001 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... | 1,645 | 1,940 | 3,037 | 3,642 | 9,409 | 7,127 | 10,088 | 9,654 | 9,128 |
| வட்டிக்கொடுப்பனவுகள் ... | 3,738 | 5,104 | 6,606 | 6,738 | 7,428 | 8,762 | 10,220 | 10,159 | 11,962 |
| வெளிநாடு ... | 713 | 915 | 1,270 | 1,623 | 1,970 | 2,209 | 2,420 | 2,564 | 3,199 |
| உள்நாடு ... | 3,025 | 4,189 | 5,336 | 5,115 | 5,458 | 6,553 | 7,800 | 7,595 | 8,763 |
| மாற்றல் கொடுப்பனவுகள் ... | 5,687 | 6,736 | 7,548 | 8,697 | 8,929 | 10.050 | 10,286 | 10,914 | 10,497 |
| அரச முயற்சிகள் ... | 557 | 1,232 | 1,768 | 1,762 | 882 | 2,350 | 2,229 | 2,286 | 1,736 |
| அரசின் ஏனைய மட்டங்கள் ... | 182 | 317 | 388 | 444 | 501 | 600 | 641 | 641 | 833 |
| குடியிருப்பாளர்கள் ... | 4,948 | 5,187 | 5,392 | 6,491 | 7,546 | 7,100 | 7,416 | 7,987 | 7,928 |
| **மூலதனச் செலவு ...** | **11,252** | **15,427** | **15,863** | **19,915** | **21,530** | **23,236** | **23,351** | **22,969** | **27,017** |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு, கட்டடவாக்கம் பேணல் ... | 4,026 | 4,829 | 5,375 | 5,849 | 7,375 | 7,788 | 12,051 | 10,828 | 15,532 |
| மூலதன மாற்றல்கள் ... | 7,226 | 10,598 | 10,488 | 14,066 | 14,155 | 15,448 | 11,331 | 12,141 | 11,489 |
| அரச முயற்சிகள் ... | 7,073 | 10,591 | 10,422 | 13,681 | 13,441 | 14,874 | 10,521 | 11,301 | 10,729 |
| அரசின் ஏனைய மட்டங்கள் ... | 149 | 167 | 317 | 198 | 481 | 472 | 702 | 732 | 672 |
| ஏனையவை ... | 23 | 15 | 11 | 44 | 26 | 101 | 108 | 108 | 88 |
| ஏனையவை ... | — 19 | — 176 | — 262 | 143 | 207 | — | — | — | — |
| **மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல்** | **2,113** | **— 256** | **1,772** | **3,292** | **1,059** | **1,991** | **2,019** | **1,377** | **4,969** |
| முற்பணக் கணக்குகள் ... | 1,716 | — 879 | 1,120 | 2,917 | 314 | — 170 | 250 | —1,180 | 100 |
| கூட்டுத்தாபனங்களுக்கான கடன் வழங்கல் | 569 | 720 | 801 | 901 | 997 | 2,669 | 2,204 | 3,018 | 5.324 |
| கடன்களின் மீள் கொடுப்பனவு ... | — 172 | — 97 | — 149 | — 526 | — 252 | — 508 | — 435 | — 461 | — 455 |
| மொத்தச் செலவும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... | 28,014 | 33,512 | 39,637 | 47,837 | 55,234 | 59,194 | 62,324 | 63,059 | 72,534 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ரூ. 10,030 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 15,990 இலட்சமாக அதிகூடிய அதிகரிப்பைக் காட்டியது. இதேவேளை வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின் கீழான மூலதனச் செலவு ரூ. 2,780 இலட்சத்திலிருந்து ரூ. 7,180 இலட்சமாக உயர்வடைந்தது. இது வேளாண்மை அபிவிருத்தியின் திட்டமிடல், நிகழ்ச்சி நிரற்படுத்தல், செயல்முறைக் கட்டுப்பாடு என்பன மீது ஏற்பட்ட ரூ. 4,440 இலட்சம் கொண்ட தொகையையும் உள்ளடக்குகின்றது.

கல்வி அமைச்சின் கீழான முதலீடு ரூ. 5,650 இலட்சமாக விளங்கி 1986 இனைவிடச் சிறிது குறைவாகக் காணப்பட்டது. அதில், ரூ. 5,150 இலட்சம் பொது, ஆசிரியர் கல்விக்கான கட்டிடங்களின் கட்டுமானத்திற்காகச் செலவிடப் பட்டது. இதேவேளை உயர் கல்வி அமைச்சின் கீழான மொத்த மூலதனச் செலவு 1986 இல் பயன்படுத்தப்பட்ட ரூ. 6,200 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,250 இலட்சமாக விளங்கியது. மறுபக்கத்தில் நலத்துறை அமைச்சின் கீழான மூலதனச் செலவு 1986 இன் ரூ. 5,390 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 10,930 இலட்சமாக உயர்வடைந்தது. மகளிர் விவகார போதனு வைத்திய சாலைகள் அமைச்சின் கீழான மூலதனச் செலவு 1986 இன் ரூ. 1,050 இலட்சத் துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,010 இலட்சமாக விளங்கியது.

நீதி அமைச்சின் கீழ் கட்டிடங்களின் கட்டுமானத்திற்கான மூலதனச் செலவு 1986 இன் ரூ. 2,280 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 3,770 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதேவேளை தபால், தொலைத்தொடர்பு அமைச்சு மூலதனச் செயற்றிட்டங்கள்மீது 1986 இன் ரூ. 6,300 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 9,490 இலட்சம் கொண்ட தொகை செலவிடப்பட்டது. கொழும்புக்கு வெளியே உள்ள பகுதியின் அபிவிருத்தித் திட்டம், கிராமிய பரிவர்த்தனை நிலையங்களுக்கு வானொலித் தொடர்புகளை அளித்தல், கொழும்புப் பகுதி அபிவிருத்தித் திட்டம் போன்றவற்றை உள்ளடக்கிய இவ்வமைச்சின் முதன்மைச் செயற்றிட்டங்களின் மூலதன முதலீடு ரூ. 6,860 இலட்சமாக விளங்கியதுடன் இது 1986 செலவிடப்பட்ட ரூ. 2,940 இலட்சத்தினைவிட மிகவும் கூடுதலாகக் காணப்பட்டது.

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஆகிய வற்றினூடாக மாவட்ட மட்டத்திலேற்பட்ட மூலதனச் செலவு 1986 இன் ரூ. 12,680 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 12,110 இலட்சமாக விளங்கியது.

1987 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான மூலதன மாற்றல்கள் ரூ. 113,010 இலட்சமாக விளங்கி 24 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தன. இதில் ரூ. 89,090 இலட்சம் அல்லது ஐந்தில் நான்கு பங்கு ஐந்து தொழில் முயற்சிகளினுல் பயன்படுத்தப்பட்டது. அவையாவன மகாவலி அபிவிருத்தி, மேலாண்மைச் சபை, தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, வரையறுக்கப்பட்ட வானூர்தி நிலைய வான் போக்குவரத்துப் பணிகள், வீதி அபிவிருத்தி மேலாண் மைச் சபை, வரையறுக்கப்பட்ட எயர் லங்கா என்பனவாகும்.

1987 இல் மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை முதன்மைச் செலவு நராகத் தொடர்ந்தும் விளங்கி மொத்த மூலதன மாற்றல்களில் ரூ. 50,870 இலட்சத்தினை அல்லது 45 சதவீதத்தினைப் பயன்படுத்தியது. எனினும், இது 1986 இல் முதலிடப்பட்ட தொகையினைவிட 15 சதவீதம் குறைவானதாகும்.

1987 இல் மூலதன மாற்றல்களின் இரண்டாவது பெரிய பெறுநராகத் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை விளங்கியது. இக்கூட்டுத்தாபனத்திற்கான மொத்த மூலதன மாற்றல்கள் முன்னைய ஆண்டின் ரூ. 9,940 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 12,340 இலட்சமாக விளங்கியது.

வரையறுக்கப்பட்ட வானூர்தி நிலைய வானூர்திப் போக்குவரத்துப் பணிகளுக்கான மூலதன மாற்றல்கள் 1986 இன் ரூ. 14,230 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 9,110 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளை வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்கானது ரூ. 8,760 இலட்சத்திலிருந்து ரூ. 7,840 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை 1987 இல் தேசிய வானூர்திச் சேவையான எயர் லங்காவுக்கான மூலதன வழங்கல் ரூ. 8,930 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 24,030 இலட்சத்திலிருந்து கடுமையான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. 1987 இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்கான மூலதன மாற்றல்கள் ரூ. 3,740 இலட்சத்திற்கு வகை கூறிய வேளையில் தேசிய இளைஞர் சேவைகள் சபைக்கானது ரூ. 3,940 இலட்சமாக விளங்கியது.

**மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல்**

1987 இல் மீள் கொடுப்பனவுகளைக் கழித்த அரசின் கடன் வழங்கல் 1986 இன் ரூ. 19,910 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 13,770 இலட்சமாக விளங்கியது. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ரூ. 11,800 இலட்சம் கொண்ட தேறிய உள் கொடுப்பனவொன்றினை விளைவித்த வேளையில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கடன்கள் வடிவில் வழங்கப்பட்ட நிதி மூலவளங்கள் ரூ. 30,180 இலட்சமாக விளங்கியது. இதேவேளை அரசிற்கான கடன்களின் மீள் கொடுப்பனவுகள் 1986 இல் ரூ. 5,080 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,610 இலட்சமாக விளங்கியது.

அரச திணைக்களங்கள் தொடர்பான முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் 1986 இன் ரூ. 2,210 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ரூ. 9,030 இலட்சம் கொண்ட தேறிய உள் கொடுப்பனவு ஒன்றினை விளைவித்தன. 1986 இல் ரூ. 3,660 இலட்சம் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 11,620 இலட்சம் கொண்ட மிகையினை உருவாக்கிய உணவுக் கொள்வனவும் வழங்கலும் கணக்கிலேற்பட்ட முன்னேற்றம் இதற்குப் பெருமளவுக்குக் காரணமாகும். இதேவேளை களஞ்சியமும் பொருட்களும் கணக்கும் 1986 இன் ரூ. 2,190 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 2,300 இலட்சம் கொண்ட மிகையினை உருவாக்கக் கூடியதாகவிருந்தது.

அரச கூட்டுத்தாபனங்களுக்கான கடன்களின் வடிவில் வழங்கப்பட்ட நிதி மூலவளங்கள் ரூ. 30,180 இலட்சமாக விளங்கியது. இதில், 19,190 இலட்சம் கொண்ட தொகையொன்று சமனலவேவா, இரந்தம்பே மின்வலுச் செயற்றிட்டங்களினதும் வேறு பல மின்மாற்று, மின் வழங்கல் செயற்றிட்டங்களினதும் அபிவிருத்திக்காக இலங்கை மின் சபைக்குக் கடனாக வழங்கப்பட்டது. இம்முழு ஒதுக்குகளும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைத்தன.

**வரவு செலவுத்திட்டக் குறையினை நிதியிடல்**

1987 இல் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் தொடக்க மதிப்பீடான ரூ. 166,970 இலட்சத்திற்கு எதிராக ரூ. 163,800 இலட்சம் கொண்ட குறையினை (கொடைகளின் பின்னர்) விளைவித்தன. ஒப்பிடுகையில், முன்னைய ஆண்டில் குறை ரூ. 182,030 இலட்சமாக விளங்கியது. எனினும், வெளிநாடுகளிலிருந்தும் வங்கியல்லா மூலங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய மூலவளங்களை இக்குறை விஞ்சியுள்ளது. எனவே, தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு இக்குறைபாடு வங்கி மூலங்களிலிருந்து நிதியிடப்பட வேண்டியிருந்தது. 1986 இல் இம் மூலங்களிலிருந்து பயன்படுத்தப்பட்ட ரூ. 30,470 இலட்சத்திற்கு எதிராக 1987 இல் ரூ. 35,410 இலட்சம் கொண்ட குறையினை நிதியிடுவதற்கு இம்மூலங்கள் உதவின.

ரூ. 57,160 இலட்சம் கொண்ட தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டினைவிட 37 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்ததுடன் 1986 இன் ஏறத்தாழ 50 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1987 இல் மொத்த வரவு செலவுத் திட்டக் குறையின் 30 சதவீதத்தினை நிதியிட்டது. தொடக்க வரவு செலவுத் திட்டம் ரூ. 66,490 இலட்சம் கொண்ட பயன்பாட்டினை எதிர்பார்த்தது. 1987 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கு வெளிநாட்டுக் கடன்களின் குறைந்தளவான பயன்பாடு எதிர்பார்க்கப்பட்டபோதிலும் உண்மையான குறைப்பு எதிர்பார்க்கப்பட்டதைவிட மிகவும் கூடியதாகும். இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவின் வெட்டுக்களின் விளைவால் ஏற்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் குறைப் பயன்பாட்டினால் இது ஓரளவுக்கு இயலச்கூடியதாகவிருந்தது.

1987 இல், உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடுகள் ரூ. 7,240 இலட்சமாக விளங்கிய வேளையில் சந்தைக் கடன்பாடுகள் ரூ. 99,400 இலட்சமாக விளங்கின. ஏறத்தாழ முன்னைய ஆண்டின் மட்டத்தில் விளங்கிய சந்தைக் கடன்பாடுகள் வங்கியல்லா மூலங்களிலிருந்தான ரூ. 63,990 இலட்சத்தையும் வங்கி மூலங்களிலிருந்தான ரூ. 35,410 இலட்சத்தையும் கொண்டிருந்தன. வங்கியல்லா மூலங்களிலிருந்தான உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகள் ரூபாப் பிணைகள் மூலமான ரூ. 61,170 இலட்சத்தையும் திறைசேரி உண்டியல்களிலிருந்தான ரூ. 2,820 இலட்சத்தையும் கொண்டிருந்தன. அரசின் செல்வாக்கிற்குட்படாத மூலங்களிலிருந்தான மூலவளங்கள் 1986 இன் 2,760 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 6,760 இலட்சத்திற்கு அதிகரித்தபோதிலும் ரூபாப் பிணைகளுக்கான ஏறத்தாழ 90 சதவீதப் பங்கு ஊழியர் சேமநிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் போன்ற மரபுவழியான அரசின் செல்வாக்கிற்குட்பட்ட மூலங்களிலிருந்தே கிடைத்தது. எனினும் 1987 இல் சந்தையல்லா மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் 1986 இனைவிட 5 சதவீதம் குறைவானதாக விளங்கியது.

ரூ. 163,880 இலட்சம் கொண்ட மொத்த வரவு செலவுத்திட்டக் குறையில் வெளிநாட்டு, உள்நாட்டுச் சந்தையல்லா, சந்தை வங்கியல்லா மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்க மொத்த மூலவளங்கள் ரூ. 128,390 இலட்சம் கொண்ட தொகையினை நிதியிட்டன. இதன் விளைவாக ஏற்படும் ரூ. 35,410 இலட்சம் கொண்ட மூலவள இடை வங்கி மூலங்களிலிருந்து நிதியிடப்பட்டது. இதில், ரூ. 33,460 இலட்சம் திறைசேரி உண்டியல் மூலம் பெறப்பட்டது. இதேவேளை மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் முன்னைய ஆண்டின் ரூ. 4,070 இலட்சம் கொண்ட தேறிய கடன்பாடுகளுக்கு

அட்டவணை 1.44

உடமையாளரின்படி வெளிநிற்கும் அரசின் படுகடன்

| விடயம் | தொகை (பத்து இலட்சம் ரூபாயில்) | | | | வெளிநின்ற தொகையின் சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1987 | 1984 | 1985 | 1986 | 1987 |
| 1. உள்நாடு ... ... ... | 51,651 | 62,611 | 69,499 | 78,997 | — 0.2 | 21.2 | 11.0 | 13.7 |
| 1.1 சந்தை ... ... ... | 51,555 | 62,492 | 69,352 | 78,816 | — ... | 21.2 | 11.0 | 13.6 |
| 1.1.1 வங்கியல்லா ... ... ... | 33,783 | 37,338 | 42,159 | 48,312 | 9.0 | 10.5 | 12.9 | 14.6 |
| 1.1.2 வங்கி ... ... ... | 17,772 | 25,154 | 27,193 | 30,504 | — 13.6 | 41.5 | 8.1 | 12.2 |
| 1.2 சந்தையல்லா ... ... ... | 96 | 119 | 147 | 181 | — 51.0 | 23.3 | 24.0 | 22.8 |
| 2. வெளிநாடு ... ... ... | 53,681 | 67,673 | 86,208 | 110,046 | 16.6 | 26.1 | 27.4 | 27.7 |
| 2.1 பல்புடை ... ... ... | 16,131 | 19,512 | 23,983 | 30,208 | 25.7 | 21.0 | 22.9 | 26.0 |
| 2.2 இருபுடை ... ... ... | 30,181 | 39,956 | 53,176 | 71,587 | 9.5 | 32.4 | 33.1 | 34.6 |
| 2.3 நிதிச்சந்தைகள் ... ... ... | 7,369 | 8,205 | 9,049 | 8,251 | 31.1 | 11.3 | 10.3 | — 8.9 |
| மொத்தம் ... ... | 105,332 | 130,284 | 155,707 | 189,043 | 7.7 | 23.7 | 19.5 | 21.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.45

### படுகடன் மூலங்களின்படி அரச படுகடன்

| விடயம் | வெளி நிற்கும் தொகை (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | வெளிநிற்கும் தொகையின் சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1987 | 1984 | 1985 | 1986 | 1987 |
| 1. உள்நாட்டுப் படுகடன் ... | 51,651 | 62,611 | 69,499 | 78,997 | — 0.2 | 21.2 | 11.0 | 13.7 |
| 1.1 நடுத்தர நீண்டகால படுகடன் ... | 33,324 | 36,689 | 39,277 | 45,138 | 3.7 | 10.1 | 7.1 | 14.9 |
| 1.1.1 ரூபாக் கடன்கள் ... | 33,228 | 3,570 | 39,130 | 44,957 | 4.0 | 10.1 | 7.0 | 14.9 |
| 1.1.2 நிருவாகக் கடன்கள் ... | 9.6 | 11.9 | 14.7 | 18.1 | — 51.0 | 23.4 | 23.9 | 22.8 |
| 1.2 குறுங்காலப் படுகடன் ... | 18,328 | 25,922 | 30,222 | 33,859 | — 6.6 | 41.4 | 16.6 | 12.0 |
| 1.2.1 திறைசேரி உண்டியல்கள் ... | 14,860 | 22,280 | 26,173 | 29,850 | — 14.6 | 49.9 | 17.5 | 14.1 |
| 1.2.2 வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 1.0 | 9 | 9 | 9 | — 3.0 | — 2.1 | — 3.2 | — 2.1 |
| 1.2.3 மத்திய வங்கியின் முற்பணங்கள் ... | 3,458 | 3,633 | 4,040 | 4,000 | 56.5 | 5.1 | 11.2 | — 1.0 |
| 2. வெளிநாட்டுப் படுகடன் ... | 53,681 | 67,673 | 86,208 | 110,046 | 16.6 | 26.1 | 27.4 | 27.7 |
| 2.1 செய்யற்றிட்டக் கடன்கள் ... | 25,971 | 36,406 | 50,418 | 68,843 | 33.0 | 40.2 | 38.5 | 36.5 |
| 2.2 பண்டம் ... | 18,426 | 22.373 | 27,766 | 34,995 | 3.0 | 21.4 | 24.1 | 26.0 |
| 2.3 ஏனையவை ... | 9,284 | 8,894 | 8,024 | 6,208 | 7.9 | — 4.2 | — 9.8 | — 22.6 |
| மொத்தம் | 105,332 | 130,284 | 155,707 | 189,043 | 7.7 | 23.7 | 19.5 | 21.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

எதிராக ரூ. 400 இலட்சம் கொண்ட தேறிய மீள் கொடுப்பனவு ஒன்றினை ஏற்படுத்தின. இதேவேளை, 1987 இல் வங்கித்தொழில் முறைக்கு ரூ. 70 இலட்சம் கொண்ட ரூபாக் கடன்களின் தேறிய மீள் கொடுப்பனவு ஒன்றும் செய்யப்பட்டது. இவ்வாண்டில் பண நிலுவைகளின் பயன்பாடு ரூ. 2,420 இலட்சமாக விளங்கியது.

**அரச படுகடன்**


1987 இறுதியில் வெளிநிற்கும் அரச படுகடன் ரூ. 1,890,430 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ. 1,557,070 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 21 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. உள்நாட்டுப் படுகடன் 14 சதவீதத்தால் ரூ. 789,970 இலட்சத்திற்கு உயர்வடைந்தவேளையில் வெளிநாட்டுப் படுகடன் 28 சதவீதத்தால் ரூ. 1,100,460 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. படுகடன் வழங்குனரின் படியானதும் படுகடன் வகை மூலங்களின் படியானதுமான வெளி நிற்கும் அரச படுகடனின் உள்ளமைப்பு அட்டவணை 1.44 இலும், 1.45 இலும் தரப்பட்டுள்ளது.

1987 இறுதியில், உள்நாட்டுப் படுகடன், மொத்தப் படுகடனில் 42 சத வீதத்திற்கு வகை கூறியது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் வெளிநிற்கும் படுகடன் சந்தை உடைமைகள் ரூ. 788,160 இலட்சமாக விளங்கியது. (மிகுதி சந்தையல்லா அல்லது நிருவாகக் கடன்பாடுகளைக் கொண்டிருந்தது). இது கடந்த ஆண்டின் 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14 சதவீதமான அதிகரிப் பாகும். முன்னைய ஆண்டினைப்போலவே வங்கியல்லாத்துறை சந்தை வைப்புக் களில் 61 சதவீதத்தினை வைத்திருந்த வேளையில் மிகுதி வங்கித்தொழில்வசமிருந் தது.

நடுத்தர நீண்டகால உள்நாட்டுப் படுகடன் (ஒரு ஆண்டிற்குக் கூடியது) 1987 இறுதியில் ரூ. 451,380 இலட்சமாக விளங்கிய வேளையில் குறுங்காலப் படுகடன் (ஒரு ஆண்டிற்குக் குறைவான) ரூ. 338,590 இலட்சமாக நிலைத் திருந்தது. நடுத்தர நீண்டகாலப் படுகடன் 15 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த வேளையில் குறுங்காலப் படுகடன் 12 சதவீதத்தால் அதிகரித்தது. எனவே மொத்த உள்நாட்டுப் படுகடனில் நடுத்தர நீண்டகாலப் படுகடனின் பங்கு முன்னைய ஆண்டினைப் போலவே 57 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

நடுத்தர நீண்டகால உள்நாட்டுப் படுகடன்களில் தொடர்ந்தும் ரூபாப் பிணைகள் முழுப் பங்கினையும் வகித்தன. ஆண்டு முடிவில் வெளிநின்ற ரூபாக் கடன்கள் ரூ. 449,570 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டின் 7 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டின. ரூபாப் பிணைகளின் ஊடாக முன்னைய ஆண்டின் ரூ. 77,770 இலட்சத்திற்கு எதிராக 1987 இல் ரூ. 70,000 இலட்சம் பெறப்பட்டபோதும் இவ்வாண்டின் மீள் கொடுப்பனவுகள் ரூ. 11,720 இலட்சமாக அமைந்தமை காரணமாக ரூபாக் கடன்கள் மீதான வெளிநின்ற பொறுப்பு ரூ. 58,280 இலட்சத்தினால் மட்டுமே அதிகரித்தது.


## அரச படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

* கடன்தீரைப்பு நிதியங்கள் நீங்கலாக அரச மொத்தப் படுகடன்.

## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்த உள்நாட்டுப் படுகடன்

ஊழியர் சேமநிதியமும், தேசிய சேமிப்பு வங்கியும் தொடர்ந்தும் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய உதவுநர்களாக விளங்கின. ஊழியர் சேம நிதியத்தினுல் ரூபாக் கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள் ரூ. 42,280 இலட்ச மாக விளங்கி 1986 ஆம் ஆண்டினைவிட 17 சதவீதம் குறைவானதாகவிருந்தது. இதேவேளையில் தேசிய சேமிப்பு வங்கியால் உதவப்பட்ட ரூ. 20,960 இலட்சத் தைக் கொண்ட தொகை 12 சதவீதம் குறைவானதாகவே விளங்கியது. ஏனைய உதவுநர்களால் ரூபாப் பிணைகளின்மீது செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 2,760 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 6,760 இலட்சத்திற்கு அதிகரித்திருந்தன. இவை பெரும்பாலும் ஏனைய சேமநிதி யங்களிலிருந்தும் ஓய்வூதிய நிதியங்களிலிருந்துமே கிடைத்தன.


இதேவேளையில், குறுந்தவணைக் கடன்பாடுகளுக்கான முக்கிய கருவியான திறைசேரி உண்டியல்களை வழங்குவதன்மூலம் ரூ. 36,770 இலட்சம் பெறப் பட்டது. இது 1986 இல் பெறப்பட்ட ரூ. 38,930 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்க தாகும். இதன்படி திறைசேரி உண்டியல்களின்பேரிலான வெளிநின்ற பொறுப்புக் கள், இவ்வாண்டின் இறுதியில் ரூ. 298,500 இலட்சத்திற்கு உயர்வடைந்தன.

1987 இல் அரசிற்கான மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் முன்னைய ஆண்டின் ரூ. 4,070 இலட்சம் கொண்ட கடன்பாட்டுக்கு மாருக ரூ. 400 இலட்சம் கொண்ட தேறிய மீள் கொடுப்பனவினை ஏற்படுத்தின. இதன்படி 1987 இறுதியில் இதன் மீதான வெளிநின்ற பொறுப்புக்கள் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளதான ரூ. 40,400 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 40,000 இலட்சமாக விளங்கின.

வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 1,100,460 இலட்சமாக விளங்கி இவ்வாண்டின் இறுதியில் மொத்தப் படுகடனின் 58 சதவீதத்திற்கு வகை கூறியது.

இது 1986 இன் 27 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 28 சதவீத அதிகரிப் பினைக் காட்டியது. இவ்வாண்டில் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான தேறிய கடன்பாடுகள் ரூ. 56,320 இலட்சமாக விளங்கியபோதும் ஆண்டின் இறுதியில் செலாவணி வீத மாற்றங்களினுல் எழுந்த ரூ. 182,050 இலட்சம் கொண்ட மேலதிகப் பொறுப்புக்களும் காணப்பட்டன. முன்னைய ஆண்டில் இது தொடர்பான வட்டி ரூ. 95,430 இலட்சமாக விளங்கியது. இதனுல் இவ்வாண் டின் இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 238,370 இலட்சம் அதிகரிப்பினைக் காட்டியது. மொத்த வெளிநின்ற வெளிநாட்டுக் கடப்பாடுகளில் ரூ. 302,080 இலட்சம் அல்லது 27 சதவீதம் பல்புடை நிறுவனங்களுடையதாகும் இது முன்னைய ஆண்டின் இறுதியின் ரூ. 239,830 இலட்சத்துடன் அல்லது 28 சத வீதத்துடன் ஒப்பிடத்தக்கது. வெளிநின்ற இருபுடை கடன்கள் 1986 இன் ரூ. 531,760 இலட்சங்களிலிருந்து 1987 இல் ரூ. 715,870 இலட்சமாக உயர்ந் திருந்த வேளையில் வர்த்தகச் சந்தைக் கடன்பாடுகள் 1986 இல் ரூ. 90,490 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 82,510 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இது பல்புடை, இருபுடை மூலங்களிலிருந்து பெருமளவு சலுகை அடிப்படையி லான வெளிநாட்டுக் கடன்பாடுகளில் தங்கியிருக்கும் அரசின் கொள்கையினைப் பெரிதும் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்கள் ரூ. 688,430 இலட்சம் கொண்ட செயற்றிட்டக் கடன்களேயும், ரூ. 412,030 இலட்சம் கொண்ட செயற்றிட்டமல்லாக் கடன்களேயும் உள்ளடக்குகின்றன. 1987 இல் செயற்றிட்டக் கடன்களின் தேறிய பயன்பாடு ரூ. 75,950 இலட்சமாக விளங்கியபோதும் இக்கணக்கின் வெளிநின்ற பொறுப்புக்கள் செலாவணி வீதங்களின் மாற்றங் களிஞல் எழுந்துள்ள மேலதிகப் பொறுப்புக்களின் விளேவாக ரூ. 184,250 இலட்சங்களிஞல் அதிகரித்துக் காணப்பட்டது. இதேவேளேயில் செயற்றிட்ட மல்லாக் கடன்களின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் ரூ. 19,630 இலட்சம் கொண்ட தேறிய மீள் கொடுப்பனவுகளே ஏற்படுத்தின. ஆஞல் செலாவணி வீத மாற்றங்களிஞல் எழுந்த ரூ. 73,760 இலட்சம் கொண்ட மேலதிகப் பொறுப்புக் களின் விளேவாக வெளிநின்ற பொறுப்புக்கள் ரூ. 54,130 இலட்சங்களிஞல் உயர்வடைந்திருந்தன.

**அரச படுகடன் பணிகள்**

கடன் தீர்ப்பனவையும் வட்டிக் கொடுப்பனவுகளேயும் உள்ளடக்கிய அரச படுகடனின் மீதான பணிக் கொடுப்பனவுகள் 1986 இன் ரூ. 162,920 இலட் சங்களிலிருந்து 1987 இல் ரூ. 157,520 இலட்சங்களிற்கு அதிகரித்தது. இந்த வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1986 இன் 9 சதவீதத்திலிருந்து 1987 இல் 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

வெளிநாட்டுக் கடன்களுக்கான படுகடன் மீள் கொடுப்பனவுகள் ரூ. 46,900 இலட்சங்களுக்கு வகை கூறி 55 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளவேளேயில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 25,640 இலட்சமாக விளங்கி 16 சதவீதமான அதிகரிப்பினேக் காட்டின. ஆகையால் வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்த அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ. 72,540 இலட்சமாக இருந்து முன்னேய ஆண்டினே விட 39 சதவீதமான அதிகரிப்பினேக் கொண்டிருந்தன.

இதேவேளேயில் அரச உள்நாட்டுப் படுகடன் மீள் கொடுப்பனவுகள் 1986 இன் ரூ. 45,050 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 9,020 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளேயில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 65,530 இலட்சங் களிலிருந்து ரூ. 75,950 இலட்சங்களுக்கு அதிகரித்தன. ஆகையிஞல் உள்நாட்டுப் படுகடன் மீதான மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முன்னேய ஆண்டினேவிட 23 சதவீத வீழ்ச்சியினேக் காட்டின. 1987 இல் ரூபாய்க் கடன்களின் நிகழ்ச்சித் திட்டத்தில் பிரதிபலித்த ஒழுங்கற்ற முதிர்ச்சித் தன்மைப் போக்கின் விளேவாக உள்நாட்டுப் படுகடன் மீள் கொடுப்பனவில் கணிசமானளவு குறைப்புக் காணப்பட்டது.